DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

Calendar ...

Miscellaneous ...

Preliminary Register ... Case No: C.C. No. 340/2025

Session ...

Prosecution / PW-3

Deposition of Witness for ... Defence / Court

---

Name : திரு.முகமதுசைபுல் கிசாம்(சார்பு ஆயவாளர்)

Father's Name (or)

Husband Name : த/பெ.

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 11.08.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பரமக்குடிநகர் காவல்நிலையத்தில் சார்புஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2025 ம் ஆண்டு ஆர்எஸ் மங்கல காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது இரவு 19.00 மணிக்கு நானும் நிலைய காவலர் திரு.முனியசாமி, மற்றும் திரு.சந்திரசேகர் ஆகியபோலிஸ் பார்ட்டிகளுடன் ரோந்து சுற்றி வந்தபோது ஆர்எஸ்மங்கலம் NH 536 ரோட்டில் உள்ள ஷபி டிரேடர்ஸ் கடை அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர்விலாசம்

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.08.11 17:32:33 +0530

கேட்டுதெரிந்த பாரனூர் வைரவன்மகன் பழனி என்பவர் எங்களை பார்த்ததும் தப்பி ஓட எத்தணித்தவரை பிடித்து சோதனை செய்ய அவர்நின்ற இடத்தில் சாக்குபையில் அரசுமுத்திரையுடன் கூடிய 180 மிலி அளவுகொண்ட Express பிராந்தி 96 பாட்டில்கள் தனது சுயலாபம் கருதிவிற்பனைக்காக வைத்திருந்தவரை கைதுசெய்வதற்கான காரணம் கூறி கைதுசெய்து 19.15 மணிக்கு சம்பவயிடத்தில் பொது சாட்சிகள் யாரும் இல்லாததால் மேற்படி இரண்டு காவலர்கள் முன்னிலையில் 96 மதுபான பாட்டில்களை அத்தாட்சி தயார்செய்து கைப்பற்றி 20.00 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.157/25u/s 4(1)(c) TNP ACT படி வழககுபதிவுசெய்தேன். அத்தாட்சி அ.சா,ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது, முதல்தகவல்அறிக்கை அ.சா,ஆ.4 ஆககுறியீடு செய்யப்படுகிறது.

2.கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை கொட்டிஅழித்து அதே நாளில் எதிரியை தக்க இருஜாமீன் பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் காவலர்கள் முனியசாமி, சந்திரசேகர் ஆகியோர் தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரிமீது அதே பிரிவுகளின் கீழ் குற்றஇறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவசமயத்தில் எங்கள் காவல நிலைய பொறுப்பு அதிகாரி காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். காவலர்கள் அன்றாடம் செய்யக்கூடிய பணிகளை பாக்கெட்நோட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் அன்றாடம் செய்யக்கூடிய பணிகளை GD யில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். பாக்கெட்நோட் மற்றும் GD யை ஆய்வாளர் ஆய்வுசெய்து அதில் கையொப்பம் இடுவது வழக்கம் என்றால் சரிதான். பொதுவாக கைப்பற்றிய வழக்குசொத்துகளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில ஒப்படைப்பது வழக்கம் என்றால் சரிதான். கைப்பற்றிய சொத்துகளை அழிப்பதற்கு எங்களுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என்றால் சரிதான். பொதுவாக அரசு மதுபான கடையில் விற்கப்படும் மதுபாட்டில்களில் வரிசை எண்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால்சரிதான்.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.08.11 17:32:39 +0530

2.அவ்வாறு வரிசை எண்கள் இருந்தால் அதனை அத்தாட்சி மற்றும் படிவம் 95 ல் குறிப்பிட வேண்டும் என்றால்சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றிய மதுபாட்டில்களில் வரிசை எண்கள் குறிப்பிடப்பட்டு இருந்ததா என்று நினைவில் இல்லை. இவ்வழக்கில் மதுபாட்டில்களில் வரிசை எண்கள் இருந்தால் அதனை அத்தாட்சியில் குறிப்பிட்டு இருக்க வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் வழக்கு சொத்துகளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. வழக்குசொத்துகளை அழிப்பதற்கு நிலைய பொறுப்பு அதிகாரி எனக்கு வாய்மொழி உததரவு பிறப்பித்தார். எந்த வித எழுத்து பூர்வ உத்தரவும் பிறப்பிக்கவில்லை. நிலையை பொறுப்பு அதிகாரி எனக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பித்த விவரத்தை குற்றஇறுதியறிக்கை, முதல்தகவல்அறிக்கை என எந்த ஆவணத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. வழக்குசொத்துகளை அழித்ததற்கு அழித்தல்மகசர் தயார்செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் தேசிய நெடுஞ்சாலை என்றும் அங்கு மாலை 7 மணியளவில் வாகனபோக்குவரத்து மக்கள் நடமாட்டமும் அதிகம் இருக்கும் என்றால் சரியல்ல. ஆள்நடமாட்டம் இருக்காது. சம்பவயிடமானது தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஷபி ஸ்டில்ஸ் என்ற இரும்புகடை பக்கத்தில் அமைந்துள்ளது. அரசு மதுபான கடைக்கும் சம்பவயிடத்திறகும் சுமார் 200 மீட்டர் இடைவெளி இருக்கும். இவ்வழக்கில் பார்வைமகசர் மாதிரிவபைடம் தயார் செயய்வில்லை என்றால் சரிதான். சமபவயிடத்திற்கு அருகே உணவகங்கள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. அது பொட்டல்காடாக தான் இருந்தது. ஷபி ஸ்டில்ஸ் கடையில் இருந்தவர்களை விசாரித்தேனா என்று எனக்கு நினைவில் இல்லை.

4.அத்தாட்சி 19.15 மணிக்கு தயார்செய்யபப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியை தெருவிளக்கு வெளிச்சம் மற்றும் ஷபி ஸ்டில்ஸ் கடையில் முன்பு இருந்த வெளிச்சத்தில் வைத்து தயார்செய்தேன். அத்தாடசியில் சூரியவெளிச்சம் அல்லாமல் பிற வெளிச்சத்தில் தயார்செய்யப்படும் பட்சத்தில் அதை குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான். அ.சா,.ஆ.3 அத்தாடசியில் அது எந்த வெளிச்சத்தில் தயார்செயய்யப்ட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எந்த அரசுமதுபான கடையில் வாங்கினார் என்று விசாரித்தேனா என்றால் விசாரணையில்

ANTONY RISHAN DEV

Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.08.11 17:32:46 +0530

தெரியவில்லை. ஆர்.எஸ்.மங்கலத்தில் வட்டாட்சியர், VAO துணை வட்டாட்சியர் ஆகியோர் அலுவலகங்களும் குடியிருப்புகளும் உள்ளது என்றால் சரிதான். எதிரி 96 மதுபாட்டிலகளை வைத்திருந்ததாலும் விசாரித்தபோது சரியாக பதில் அளிக்காததாலும் சட்டததிற்கு புறம்பாக அளவிற்கு அதிகமாக மதுபாட்டில்கள் வைத்திருந்ததால் விற்பனைக்காக வைத்திருந்தார் என்று தெரிந்துகொண்டேன். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியை GAZETTED அதிகார முன்பு பதிவுசெய்வதற்கு நான் நடவடக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பொதுநபர்களை விசாரிக்கவில்லை என்றால் சம்பவயிடத்தில் பொதுமக்கள் இல்லை அதனால் விசாரிக்கவில்லை.

5.நானே தன்னிச்சையாக வழக்குபதிவுசெய்து விசாரித்து குற்றஇறுதியறிக்கை தாக்கல்செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரி எந்த குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்றும் புள்ளிவிவரகணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்து அவசர கதியில் இயற்கை விதிக்கு புறம்பாக குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்று இருந்தால் வழக்குசொத்துகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்போம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சமமந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

ANTONY RISHAN DEV

Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.08.11 17:32:53 +0530

Judicial Magistrate,
Thiruvadanai.